ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

स स्निग्धोऽकुशलान्निवारयति यः तत्कर्म यन्निर्मलं
सा स्त्री यानुविधायिनी स मतिमा न्य स्सद्भिरभ्यर्च्यते ।
सा श्री र्या न मदं करोति स सुखी यस्तृष्णया मुच्यते
तन्मित्रं यदकृत्रिमं स पुरुषो यः खिद्यते नेन्द्रियैः ॥

எவன் கஷ்டத்திலிருந்தும் நம்மை நிவர்த்தியடையும்படி செய்கின்றானோ, அவனே நம்மிடம் அன்புள்ளவனாவான்; எது தோஷமில்லாமலிருக்கின்றதோ, அதுவே கர்மா; எவள் கணவனின் கட்டளை தவறாமல் அவனையனுசரித்துச் சரியாய் நடக்கின்றனளோ, அவள்தான் இல்லாளெனப்படுவாள்; எவன் ஸஜ்ஜனங்களாற் பூஜிக்கப்படுகின்றானோ, அவனே அறிவிற்சிறந்தவன்; எவள் தன்னையடைந்தவனுக்கு அதிக மதத்தை யுண்டுபண்ணி, பாபகருமங்களில் பிரவேசிக்கும்படி செய்யவில்லையோ, அவள்தான் ஸ்ரீ (லட்சுமி) எனப்படுவாள்; எவன் ஆசையெனும்பேயால் பீடிக்கப் படவில்லையோ, அவனே எப்பொழுதும் சுகமுள்ளவன்; எவன் கபடமில்லாமல் ருஜுவானஎண்ணத்துடன் பழகுகின்றானோ, அவனே உற்றநண்பனாவான்; எவன் இந்திரியங்களுக்கு வசமாகி, அவைக ளிழுக்கும் வழியே சென்று சஷ்டப்படாமல் அவற்றை தனக்கு சுவாதீனமாகச் செய்துகொண்டிருக்கிறானோ, அவன்தான் புருஷனெனப்படுவான்.

இதனால் ஆப்தர்களிடத்திலிருக்கவேண்டிய முறைமையும் கர்மாவென்றால் எது என்பதும், ஓர்குடும்பஸ்திரீ எவ்விதமிருத்தல்வேண்டுமென்பதும், அறிவுடையாரென்று எவரைக் கூறலாமென்றும், லக்ஷ்மியானவள் எவ்விதமிருந்தால் நமக்கு சிரேயஸ்ஸென்றும், உலகில் கஷ்டப்படாமலிருப்பவன் எவனென்பதும் மித்திரனின் இலக்கணமும், உத்தம புருஷர்களுடைய நிலைமையும் தெளிவுற உணர்த்தப்பட்டிருக்கின்றது. இங்குகூறப்பட்டவைகளில் இரண்டு விஷயங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டாலும் போதுமானது. அவை, ஆசையின்மை, இந்திரியங்களைத் தன்வசப் படுத்திக்கொள்ளுதல் ஆகிய இவ்விரண்டுமேயாம்,

ளின்றும் உண்டாகிறாய் என்றதனால் அந்தந்த அவயவஸார மென்றேற்பட்டது. இதனால்தான் மனிதனுக்கு மனிதனும் மற்ற அந்தந்த ஜந்துவுக்கு அததன் ரூபமுள்ள ஜந்துவும் பிறக்கிறது. மற்று ஹிருதயத்தினின்றும் உண்டாகிறாய் என்று சொன்னது தான் ஸாரமாய் கவனிக்கத்தக்கது. எல்லா அவயவங்களினின்றும் உண்டாகும் ஸாரமானபாகமானது அந்த சரீரம் போல் ஹிருதயத்தில் ஸௌக்ஷ்மமான அச்சுக்குழியில் இந்த ரேதஸ் போய்ப் பாய்ந்து 4 மாத பரியந்தமும் அந்த ரூபம் போல் இருக்குமாம். அவ்விதம் மனித ஸம்ஸ்காரத்தையோ மற்ற ரூபத்தையோ அடைந்த ரேதஸ் ரூபமான ஜீவன் ஸ்திரீயோனியிற் பிரவேசித்துப் பக்குவமடைந்து 10 மாதம் ஸ்திரீயினிடம் தங்குகிறது. ஆகவே அதனால்தான் கர்ப்பத்தில் 1 வயதாய் விட்டது என்று சொல்கிறோம். ஸ்மிருதிகாரர்களும் गर्भाष्टमेषु ब्राह्मणम् என்றெல்லாம் சொன்னார்கள். இதனால் இனிப் புருஷனிடம் 4 மாதம் தங்குவதை ஒப்புக் கொண்டால் புருஷகர்ப்பமென்பது இனி உங்களுக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணாது இவ்விதம் கர்ப்பத்தில் ஜனித்த ஜந்து தன் கர்ம பலன்படி பழையபடியும் புண்யபாபத்தை அடைவான் என்று இம்மட்டோடு நிறுத்திக் கொள்வோம். இனி இங்கு இதை ஒட்டிய சில விஷயங்களை கவனிப்போம். அதாவது இப்படி யாதனை கஷ்டத்தை அனுபவிக்காமல் சுலபமாய்ப் போக வழி இருக்கிறதாக சாஸ்திரக்காரர் கூறியிருக்கின்றனரே அதன் படி நடந்து விட்டால் சுலபமாய்ப் பரமபதமேகி விடலாம். அம்மருந்தை எல்லோரும் சிந்தித்துப் பார்த்தால் எல்லோருமே சுகமடையலாம். அதென்ன வெனில் கீதாசார்யார்

अन्तकाले च मामेव स्मरन्मुक्त्वा कलेवरम् ।
यः प्रयाति स मद्भावं याति नास्त्यत्र संशयः ॥

அந்தியகாலத்தில் என்னையே நினைத்துக்கொண்டு எவன் சரீரத்தை விடுகிறானோ அவன் என்ஸ்வரூபத்தை அடைகிறானென்று

கூறியிருக்கிறார். ஆகையால் அப்படிச்செய்யலாமென்றால் அடுத் தாற்போல் सदा तद्भावभावितः எப்போதும் பகவத்பக்தி செய்து கொண்டே இருப்பவனுக்குத்தான் அந்தியகாலத்தில் நினை வுக்கு வருமென்று முன்னமேயே கூறியிருக்கிறேன். ஆனதால் இது தப்பிக்க வழி என்று நினைப்பது தவறு. நல்லது இருக் கட்டும். உத்தராயனம் தக்ஷிணாயனம் என்ற இரண்டுகளுள் உத்தராயணத்தில் மரணமடைபவன் மோக்ஷமடைவான். ஏனெனில் அது தேவர்கள் விழித்திருக்கும் காலம். தக்ஷிணா யனம் தேவர்களுக்கு ராத்திரிகாலம். அதிலிறந்தவன் மோக்ஷ மடையமாட்டான். இவ்வபிப்பிராயத்தைத் தான் கீதாசார் யரும்

अग्निर्ज्योतिरहश्शुक्लः षण्मासा उत्तरायणम् ।
तत्र प्रयाता गच्छन्ति ब्रह्म ब्रह्मविदो जनाः ॥
धूमो रात्रिस्तथा कृष्णः षण्मासा दक्षिणायनम् ।
तत्र चान्द्रमसं ज्योतिर्योगी प्राप्य निवर्तते ॥
शुक्लकृष्णे गतीह्येते जगतश्शाश्वती मते ।
एकया यात्यनावृत्तिमन्यया वर्तते पुनः ॥

என்றும் சொல்கிறார். பாரதத்திலும் பீஷ்மர்சரதல்பத்தில் படுத் துக் கொண்டு பிராணனை உத்தராயண காலமான தை மாதம் வருமளவும் வைத்திருந்ததாகவும் படித்திருக்கிறோம். ஆகவே இதன்படி யோகம் ஞானம் முதலியன அடைந்தவர்களுக்குத் தான் நல்ல லோக மென்பது மட்டிலுமில்லை யென்று தோன்று கிறதேயெனில் அவ்விதமல்ல. யோகம் ஞானம்முதலியன பெற்ற வர்களுக்குத்தான் உத்தம லோகம். மற்று இங்கு கீதையில் சொன்னதற்கு கதியாதென்றால் இந்த சுலோகங்களின் அர்த் தத்தை முன்னமே கூறிவிட்டேன். அங்கு கண்டு கொள்க. ஆயினும் மீண்டும் கூறவேண்டுமெனில் ஒரு சிறிது கூறுகின் றேன். இங்கு ब्रह्म ब्रह्मविदः என்றும் योगी என்றுமிருப்பதை

மடையவேண்டு மென்று நியமனம் செய்ய முடியுமா. அல்லது ராத்திரியிலிறந்த போதிலும் பகலை எதிர்பார்த்திருப்பதுண்டோ என்று சொன்னார். இதை இன்னும் நன்றாய

निशि नेति चेन्न सम्बन्धस्य यावद्देहभावित्वाद्दर्शयति च ।

என்ற ஸூத்திரங்களில் தக்ஷிணாயன மரணம் முதலிய வற்றை பகவத்பாதர் நன்கு தெளிவுபடுத்தியுமிருக்கிறார். ஆகையால உத்தராயணமும் தக்ஷிணாயனம் என்ற நியமம் கிடையாதென்பது திண்ணம்.

கஎ. ஜன்மாந்திர ஞாபகம் உண்டா.

இனி இங்கு ஒரு முக்கியமான ஆசங்கையைச் செய்து அதற்கும் ஸமாதானம் தேடுவோம். அதாவது இவ்வளவுதூரம் இறந்த ஜீவன் கணக்கில்லாத கஷ்டத்தை அநுபவித்து மறுபடியும் பூமியில் பிறக்கிறதென்கிறீரே. அப்படித்தானே நாமும் பிறந்திருக்கிறோம். அப்படியிருக்கும் போது நமக்கு அந்தக் கஷ்டசுகத்தை அநுபவித்ததாக ஏன் ஞாபகம் வரவில்லை. எத்தனையோ முன் ஜன்மங்களுடைய ஞாபகம் வராமற்போனாலும் இதற்கு முன் ஜன்மத்தின் ஞாபகமாவது வரக்கூடாதா. நாம் என்ன ஜன்மம் எடுத்திருந்தோம். என்ன செய்தோம். என்பதை எவ்வளவு யோஜித்துப்பார்த்தாலும் கொஞ்சமேனும் ஞாபகத்திற்குவரமாட்டேன் என்கிறதே. நமக்குத்தான் நினைவு வரவில்லை என்றாலும் மகாமேதாவிகள் எத்தனை பெயர்களோ இருக்கிறார்களே அவர்களாவது தன் முன் ஜன்ம ஞாபகத்தைச் சொல்லக்கூடாதா. இவ்விதம் ஒருவருக்கும் கொஞ்சமேனும் ஞாபகமில்லாமலிருப்பது பிரத்யக்ஷமாய் இருக்க யாதனையை அநுபவிப்பதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும் என்பதே. இனி இதற்கு ஸமாதனம் தேடுவோம். வாஸ்தவம். முன் நடந்ததில் ஞாபகம் வேண்டியதுதான். இப்போது நான் முதலில் ஒரு கேள்வி கேட்கிறேன். நீர் சாப்பிடும் போது என்ன

பதார்த்தம் சேர்த்துக் கொண்டீர். நீர் பால்யத்தில் செய்த திருவிளையாட்டை யெல்லாம் சொல்வீரா. இது வரையில் உமது அனுபவத்தில் நடத்தினதை யெல்லாம் வரிசையாய்ச் சொல்லிவர முடியுமா. இதெல்லாமே ஞாபகத்திற்கு வரமாட்டேனென்கிறதே. சிலவற்றைத்தானே நினைக்கிறீர். அப்படியிருக்க எத்தனையோ வருஷங்கள் கடந்து விட்ட முன் ஜன்மானுபவத்தை மனதில் ஊன்றி யோஜித்துச் சொல்வதென்பது எவ்வகையில் ஸாத்தியமாகும். கொஞ்சமேனும் ஞாபகத்திற்கு வாரமலிருப்பது தான் உசிதம். பாருங்கள், இச்சரீம் விட்டுப் பிரிந்த ஜீவன் எத்தன்மை யுடையதாய் யாதனை அனுபவிக்க போகுமென்று சொன்னேன். ஜலமயமாயும் வாக்கு முதலியவைகளெல்லாம் கட்டப்பட்டு உள்ளறிவு ஒன்றுமட்டிலும் தான் இருக்குமென்று முன் சொன்னேன். அவ்வறிவு கூட சந்திர மண்டலத்திலிருந்து இறங்க ஆரம்பிக்கும்போதே குன்றி விடுமென்று சிலர் அபிப்பிராய படுகின்றனர். சிலர் எப்போது மிருக்குமென்றும் பிறகு கர்ப்பத்தை விட்டு வெளியேறும் போதுதான் பூமிஸ்பர்சமானவுடன் விஷ்ணுமாயையால்மறைக்கப்பட்டுப் போகிறதென்றும் கூறுகின்றனர். எவ்விதமாயும் அவனுக்கு அறிவே இல்லாமலிருப்பதால் மறுபடியும் பிறந்ததும் முன் ஜன்மானுபவம் இருக்க வேண்டுமென்று ஒப்புக் கொள்வது நியாயமே இல்லை. அப்படியானல் ஜீவன் யாதனை அனுபவிக்கிறுனென்றுதான் சாஸ்திரம் சொல்வானேன். இதனுல் நமக்கு வீண் மனக்கலக்க முண்டாவதைத் தவிர வேறு பிரயோஜனத்தைக் காணேமே. அக்ரமம் செய்தவன் அரசனுல் தண்டிக்கப்பட்டுக் கடுங்காவலிலோ தூக்கிலிடப்படுவதையோ நாம் கண் கூடாய் அறிவதால் ஐயோ! இக்குற்றத்தை நாம் செய்யக் கூடாது. செய்தால் நமக்கும் இக்கதிதான் எற்படுமென்று நடுக்க முண்டாகிறது. அவ்விதம் தண்டனை யடைந்தவன் விடுபட்டவுடன் இனி இப்படிச் செய்யக்கூடாது செய்ததற்கு நாம் அனுபவித்ததை நினைத்தால் தேகம் பதறுகிறது. இனிப் பிச்சை யெடுத்தாவது யோக்ய னென்று பெ

யர் வாங்குவோமென்று நினைக்கிறதுபோல் யாதனை தண்டனை கொஞ்சத்திற்கேனும் ஞாபகமிருந்தால் நமக்கு புண்யத்தில் பிரவர்த்தி உண்டாகும். அப்படிக்கு வழியில்லை. அறியவும் முடியாதென்று சொல்வதைக் காட்டிலும் நாம் இறந்து போவோம் என்ற மட்டிலும் சாஸ்திரம் சொன்னால் போதுமே என்றால் ஆகா! என்ன ஆச்சரியம். எங்கேயோ காடு மலைகளைச் சுற்றி அலைந்துவிட்டு ஆர்யமதஸ்தனென்று சொல்லிக்கொண்டிருந்துவிட்டு தேஹாத்மவாதியான சார்வாக மதத்தின் வாயிற்படியிலேயா வந்து விழுந்துக் கொண்டாய். போதும் சற்று திரும்பிப்பார். நான் சொல்வதைக் கேள். நாம் இறந்துபோவோம் என்பதோடு சாஸ்திரம் நின்றால் போதுமே என்றாயே. இறந்து போவோம் என்பதை சாஸ்திரம் சொல்லியா தெரியவேண்டும். பிரதிதினம் நாம் நேரிற்காணவில்லையா ஆனால் திரும்பவும் பிறப்பானென்று மட்டிலும் சொன்னால் போதுமே என்றால் அப்போது தான்வந்தது அனர்த்தம், எப்படித்திருப்புவான், எங்குபோவான், எங்கிருப்பான், என்ன செய்தான். நமதிஷ்டப்படி தோட்டத்தில் நல்ல ஒட்டுஜாதிக் கன்கள் நட்டு விரும்பினபடி பழம் முதலியவைகளை அடைவது போல் நாம் இஷ்டப்பட்டபடியெல்லாம் என் பிள்ளைகளை அடையவில்லை. எற்றத்தாழ்ச்சியான சிருஷ்டி என் எற்படுகிறது. என்றெல்லாம் உண்டாகும் சந்தேகத்திற்கு நாம் முற்கூறியபடி சொல்லாவிடில் வேறுவழி உண்டா. கொஞ்சம்கூட ஞாபகம் இல்லாமல் போகுமா வென்பது மட்டிலும் மனதை விட்டுப் போகமாட்டேனென்கிறதே அதனால் இப்போது நாம் புண்யத்தைச்செய்தாலென்ன பாபம் செய்தால்தான் என்ன என்னவோ தண்டனையடைகிறோமென்பதை நம்பத்தான் முடியவில்லையென்றால் அப்பா அவ்விதம் வைராக்யம் கொண்டு ஓடிவிடாதேயென்று நமது பரமாசார்யாள் கையைப்பிடித்து இழுத்து உட்கார்த்திக்கொண்டு பரம கருணையுடன் ஒரு உபமானம் இவ்வாறு கூறுகின்றனர். சாந்தோக்யத்தில் துர்விஷ்ப்ரபதாம் என்ற மந்திர பாஷ்யத்தில்

यथा च मुद्गराद्यभिहतानां तदभिघातवेदनानिमित्तसंमूर्च्छित प्रतिबद्धकरणानां स्वदेहेनैव देशाद्देशान्तरं नीयमानानां विज्ञानशू-न्यता दृष्टा तथा चन्द्रमण्डलात् मानुषादिदेहान्तरं प्रत्यवरुरुक्षतां स्वर्गभोगनिमित्तकर्मक्षयात् मृदिताद्देहानां प्रतिबद्धकरणानां तथा लवनखण्डनपेषणसंस्कारभक्षणरसादिपरिणामरेतस्सेककालेषु मू-र्च्छितवदेव ॥

தடி முதலியதால் அடிக்கப்பட்டு அதனால் மூர்ச்சையைய டைந்து இந்திரிய வியாபாரம் ஒழிந்து கிடப்பவனைக்கட்டித் தூக்கிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் அங்கு டாக் டர்கள் அறுத்தும் தைத்தும் சிகித்ஸைசெய்து பழையபடி கட்டித்தூக்கிவந்து படுக்கையிற்போட்ட 2மணி நேரத்திற்குப் பிறகுதான் அவனுக்குப்ப்ரக்ஞை வருகின்றது, அவன் பிறகு வெருண்டு பார்க்கிறான். அவனைக்கேட்டால் அப்போது என்ன சொல்வான்-நான் அங்கு சண்டையில் நின்றேன் எதிரி என்னை அடித்ததுதான் தெரியும் இப்போது இங்கு விழித்துக்கொள் கிறேனென்பான் பிறகு அருகிலிருப்பவர்கள் என்ன சொல்வார் கள் அப்பா உனக்கு மூர்ச்சைபோய்விட்டது பிடித்துக்கொண் டுவந்தோம் டாக்டர் உன் தேகத்தை அறுத்தார் தைத்தார் பிறகு இப்போது விழித்துக்கொண்டாய் என்பார்கள். அதை அவன் அநுபவித்ததாய்த்தெரியாமற்போன போதிலும்ஆப்த வாக்யம் பிரமாணமென்று சந்தேகமின்றி ஒப்புக்கொள்வானே அதுபோல் சந்திரமண்டலத்தில் ஸ்வர்க்க ஸுகம் போகப்போ கிறதேயென்ற மிகுந்த கவலையால் மிகவும் உருகி மனுஷ்யன் முதலியஜன்மாவை அடைகிற ஜீவனுக்கும் தான் இறங்கின விடம் இருந்தவிடம்தான் உட்கார்ந்திருந்த கறிகாயை நறுக்கி னது அறைத்தது வேகவைத்தது வயிற்றிற்போய்ச்சேர்ந்தது புருஷனைப்பிறந்ததுவரை ஒன்றும் தெரியாது எப்படி ஆப்த வாக்யத்தை அங்கு ஸத்தியமாய் நம்பினையோ அதுபோல் ஆப்ததமன் என்று சொல்லும்படியான வேதவாக்கை நம்பு.

ஆசார்யனே நம்பு என்று கருணாமூர்த்தி யெல்லாமறிவிக்கொளிக் காட்டுகின்ற இந்த அமுதத்தன்றோ நமக்குப் பெறுவது? ஆஸ்திகர்களே நம் கருணாமூர்த்தி பரமாசார்யர் இவ்வுலகில் அவதரிக்காவிடில் நம் நாடு என்னுடாயிருக்கும் சற்று சிந்தித்துப்பாருங்கள்

श्रीज्ञापयौषिगुरुणा करुणार्णवेन
नावातरिष्यत यदीह भवाब्धिनावा ।
अज्ञातभक्तिजगदश्रुतसच्चरित्र-
मज्ञातशास्त्रमभविष्यदवैदिकञ्च ॥

கருணைக்கடலாய நம் பரமாசார்யர் ஸம்ஸாரக்கடலில் ஓடம் அவதாரம் செய்யாமலிருந்தால் உலகம் பக்தியென்பதையறியுமா நல்சரித்திரம் காதில் விழுமா சாஸ்திரமென்ற பெயராவது வெளிப்பட்டிருக்குமா வைதிகம் என்பதிருக்குமா ஒன்றுமிராதென்றார். ஆகையால் பரமாசார்யன் சொல் ஒன்றுமே போதும் நம்மைக்கரை ஏற்ற. ஆகவே ஜன்மாந்தர ஞாபகமில்லாதது குறையல்ல.

எம் என். சுப்பிரமணியசாஸ்திரிகள்.

இராஜ்யமும் மதமும்.

(பாரதீபுத்திரன் எழுதுகிறார்.)

(௩௨-வது பக்கத்தொடர்ச்சி.)

சென்றவார ஆர்யதர்ம பத்திரிகையில் 28-12-23ல் காகிநாடா என்னுமிடத்தில் காங்கிரஸ்மஹாஸபை கூடப்போவதாயும் அச்சபையில் "ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை" என்னும் விஷயம் முக்கியமாய் ஆலோசிக்கப்படுமென்பதையும் எழுதியிருந்தேன்.

நமது தென்னிந்தியாவைக்காட்டிலும் வட இந்தியாவில் ஹிந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் மதவிஷயங்களில் அடிக்கடி வேற்றுமைகள் உண்டாவதற்கு அநேக காரணங்கள்

ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை:—முகம்மதி யர்கள் மொகரம் என்னும் பண்டிகை காலங்களில் பசுக்களை வதைசெய்யும் வழக்கத்தை அனுஷ்டிக்கிறார்கள். அதுஸமயம் விசேஷமான ஊர்வலங்களும் நடக்கும். ஊர்வலங்கள் நடக்கும் காலங்களில் பிராசீனமான வழக்கங்களுக்கு விரோதமாகவேதா வது ஸம்பவங்கள் ஏற்பட்டால் அதுஸமயம் இருமதத்தினருக் கும் சச்சரவுகள் அதிகமாகும். இவ்விதமே ஹிந்துக்களுடைய உத்ஸவகாலங்களிலும் ஏற்படுகிறது. சிலமாதங்களாக ஸமீப கால ங்களுக்குள் மகம்மதிய மதத்தில் சேர்க்கப்பட்ட ஹிந்துக்களை மறுபடியும் ஹிந்துமதத்தில் சேர்த்துக்கொள்வதற்கான பல மான ஓர் இயக்கம் ஆர்யஸமாஜத்தைச்சேர்ந்த ஸிரத்தானந்த ரால் நடத்தப்பட்டு வருகிறது. அவ்வியக்கம் தினேதினே அபி விருத்தி அடைந்து வருவதாயும்நாம் கேள்விப்படுகிறோம். அது விஷயமாய் சென்ற துந்துபி௵ பங்குனி௴ ௯௳ இப்பத்திரி கையில் எழுதியிருக்கிறேன்.

இம்மாதிரியான சச்சரவுகள் நமது தேசத்தில் நிகழாவண் ணம் தடுக்கவே ராஜகீய ஸம்பந்தமாய் தேசஸேவை செய்து வரும் சில பிரபலஸ்தர்கள் எல்லா மதத்தினருக்கும் பரஸ்பர ஒற்றுமையை எவ்விதத்திலாவது ஏற்படுத்திவிட வேண்டு மென்று எண்ணி அதற்கான சில திட்டங்களையும் தயாரித்துக் கொண்டார்கள். முன் எழுதியபடியே சென்ற சனிக்கிழமை இவ்விஷயம் காங்கிரஸ்மஹாஸபையின் ஆலோசனைக்குக்கொண் டுவரப்பட்டது. அதன்பேரில் மஹாஸபையில் பலத்த விவாதங் கள் ஏற்பட்டன. தேசம் ஸமாதானநிலைமையை அடையவேண் டிய அவசியத்தை எவரும் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால் இருமதத் தினரும் தங்கள் தங்களுடைய உரிமைகளை சிலஸமயங்களில் விட்டுக்கொடுக்கவேண்டியதான திட்டங்களை மஹாஜனங்கள் ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கமாட்டார்களென்பதாகக் கருதி இத்தீர்மானமானது காங்கிரஸ் மஹாஸபையில் பரியா லோசனை செய்யப்பட வேண்டியது அவ்வளவு அவசியமில்லை யென்றே ராஜகீய நிபுணர்கள் வெளிப்படையாகத் தெரிவித்து விட்டார்கள்.

ஸபையில் அக்ராஸனம் வஹித்த மௌலானு முகம்மதலி அவர்களும் இத் தீர்மானம் ஸபையில் ஆலோசிக்கப்படுவது தமக்கு சிறிதும்இஷ்டமில்லாத கார்யமென்றும், இதனுல் இன்னும் விபரீதமான வேற்றுமைகள் ஏற்படுமேயொழிய, ஒற்றுமையை எதிர்பார்க்க வழியில்லையென்றும் தெரிவித்தார். ஸ்ரீமான அர்ஜுனஸேத் என்பவர் ஒரு திட்டத்திற்கு தேசஜனங்கள் எல்லாரும் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமானுல், அந்த திட்டம் ஒரு சட்டமாக்கப்பட வேண்டுமென்றும், காங்கிரஸின் தீர்மானத்தை சட்டமாக்கவேண்டுமானுல், தேசத்திற்கு ஸ்வராஜ்யம் கிடைக்கவேண்டுமென்றும், ஆகையால் இத்தீர்மானம் பிரயோஜனமில்லையென்றும் சொல்லிவிட்டார். இவ்வாருக அநேகர் தங்களுடைய ஆக்ஷேபணைகளை தெரிவித்தார்கள். கடைசியில், லாலா லஜபதிராய், Dr. அன்ஸாரி, ஸர்தார், அமீர் ஸிங் இவர்களடங்கிய ஒருஸபையானது இதுவிஷயத்தில் தேசமஹாஜனங்களின் அபிப்ராயத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது.

காங்கிரஸில் இதுவிஷயம் ஆலோசிக்கப்படும் ஸமயத்தில் கல்கத்தாவில் நடந்த ஓர்ஸம்பவத்தை இவ்விடம் எழுதுகிறேன். சென்ற ஞாயிற்றுக்கிழமைதினம் ஹௌரா என்னுமிடத்தில் ஓர் முகம்மதிய மசூதிக்கு ஸமீபமாய் (மசூதியின் எல்லைக்குள்ளாகவே) ஒரு பன்றி இறந்துகிடந்ததாம். பன்றியைக் கொலைசெய்வதானது, முகம்மதியர்களுக்கு மதஸம்பந்தமாய் விரோதமாகும். ஆகையால், முகம்மதியர்கள் கோபாவேசங்கொண்டு அவர்களுக்கு ஸமீபத்திலிருந்த சில ஹிந்துக்களுடைய வீடுகளையும் கடைகளையும் சூரையாடி, அவ்விடத்திலிருந்தவர்களையும் பலமாய்த் தாக்கினுர்களாம். அதனுல் ஹிந்துக்களுக்கு விசேஷமான ஹிம்ஸை ஏற்பட்டது. ஒரு ஹிந்துவும் இறந்துவிட்டாராம். இந்தஸந்தர்ப்பங்களில், காங்கிரஸ்மஹாஸபையின் திட்டங்களும்சட்டங்களும் என்னசெய்யக்கூடுமென்பதுதான் எனது ஸந்தேகமாகும். ஸாமான்ய ஜனங்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரர்களாயுள்ள மேதாவிகள்பலர் கலகங்கள் நிகழும் இடங்களுக்கு நேரில் சென்று, ஸமாதானத்தை நிலைநாட்ட முயன்ருல்தான் சிலஸமயங்களிலாவது அமைதி ஏற்படும்.